2013 ஏப்ரல் 19]

அவர்களுக்கும், வாரித் தந்த வள்ளல் கரங்களுக்கும் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

281—

பேரூராட்சியை இணைத்தல்

***7593—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, உதயேந்திரம் பேரூராட்சியை மீண்டும் வாணியம்பாடி வட்டத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டத்தில் உள்ள உதயேந்திரம்–1, 2 மற்றும் கொல்லக்குப்பம் ஆகிய மூன்று கிராமங்களை வாணியம்பாடி வட்டத்தில் சேர்ப்பது குறித்த முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் அரசளவில் இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்பட்டு நின்ற தமிழகத்தை, பாரதமே வியக்கும் வண்ணம், நாளும் ஒரு திட்டம் தந்து தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர், ஏழைகளின் இதய

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) சிங்களவன் கூட்டத்தை தமிழகத்தின் எல்லைக்குள்ளே தடம் பதிக்க விடமாட்டேன் என்று வீறுகொண்டு எழுந்திட்ட வீரத்தின் விளை நிலமே! வேங்கையின் இருப்பிடமே! வெற்றியின் விலாசமே! தனி மனித இராணுவமே! புனிதம் மிக்க இப்பேரவையில், புரட்சிகர தீர்மானம் இயற்றி, போர்க்குற்ற விசாரிப்பும், பொருளாதாரத் தடையும் வேண்டுமென அனல் பறக்கும் ஆவேசம் காட்டி, அகிலத்தையே உற்று நோக்க வைத்த அறிவுப் பெட்டகமே! எங்கள் அம்மாவே! தங்களை வணங்குகிறேன். தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியில் பாலாற்றின் ஒரு கரையிலே வாணியம்பாடி தாலுகா அலுவலகமும் மறு கரையில் உதயேந்திரம் பேரூராட்சி–1, 2 மற்றும் கொல்லக்குப்பம் ஊராட்சிகள் அமைந்துள்ளன. சுமார் 25,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் மேற்கண்ட பகுதி மக்களின் பெரும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசு புதிதாக உருவாக்கப்பட்ட 25 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆம்பூர் தாலுகாவோடு இணைத்து விட்டார்கள். இதன்காரணமாக பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் சாதிச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, சிட்டா, பட்டா, முதியோர் ஓய்வூதியம், பிறப்பு இறப்புச் சான்று, குடும்ப அட்டை ஆகியவை பெற மிகவும் சிரமப்படுகின்ற நிலை உள்ளது. எனவே, மீண்டும் 1/2 கிலோ மீட்டர் தூரமுள்ள வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தோடு மேற்கண்ட பகுதியை இணைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமருகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையினுடைய அடிப்படையிலே இப்போது ஆம்பூர் வட்டம் இரண்டு வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்றது. அதை ஆம்பூர் வட்டத்திலே சேர்க்க வேண்டும்*

2013 ஏப்ரல் 19]

என்று சொன்னால், பிரிக்கப்படுகிற பகுதி பிரிக்கப்பட்ட பின்னாலே, அந்த வட்டத்தினுடைய பரப்பளவு வருவாய் அளவுகோலை சரிசெய்யக்கூடிய விதத்திலே இருக்கவேண்டும். அந்தப் பகுதியினுடைய மக்கள் தொகையானது குறைந்தபட்சம் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறையாமல் இருக்கவேண்டும். பரப்பளவு பிரிக்கப்பட்ட பின்னால் 250 சதுர கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்கவேண்டும். அதேபோல வருவாய்க் கிராமங்கள் 30—க்குக் குறையாமல் இருக்கவேண்டும். ஆக, அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, இவர் கேட்பதுபோன்று அந்த உதயேந்திரம் பகுதியை ஆம்பூர் வட்டத்தோடு சேர்க்கின்றபோது பிரிக்கப்படுகிற அந்த பகுதியானது அந்த வருவாய் அளவுகோலுக்குக் குறையாமல் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காக திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்கள் இல்லையென செயலாற்றி வருகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய மாட்சிமை பொருந்திய முதல்வர், சாதாரணத் தொண்டனையும் சாமான்ய மக்களையும் மாற்றிக்காட்டும் சாதனைத்தாய், ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சாய், ஏழரைக் கோடி தமிழக மக்களின் இதயத் துடிப்பாய், 125 கோடி இந்திய மக்களின் நாளைய எதிர்பார்ப்பாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 282, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.